**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 268/2019**

2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் நாள் வியாழக்கிழமை எம்.மகேஷ் என்பவரது சாட்சியாகிய **PW.3** இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 29.08.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | எம்.மகேஷ் | | | |
| Father Name | : | மாரிமுத்து | Court | : | |
| Village | : | வட்டாட்சியர் தரங்கம்பாடி | Taluk | : | தரங்கம்பாடி தாலுக்கா |
| Calling | : | | Religion | : | |
| Age | : | 52 | | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 3வது சாட்சி ஆவேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு கிடைக்கபெற்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கவந்துள்ளேன். தில்லையாடி வருவாய் கிராமம் புதிய புல எண்.486/7 ற்கான பட்டாவானது பாஸ்கரின் மனைவி சரோஜா என்பவரது பெயரில் உள்ளது. மேற்படி பட்டா நத்தம் பட்டாவாக குடியிருப்பிற்காக வழங்கப்பட்டது. சரோஜா என்பவருக்கு பட்டா கொடுக்கப்படுவதற்கு முன்பு மேற்படி நிலம் அரசு புறம்போக்காக இருந்ததா என்பது பற்றி ஆவணத்தில் இல்லை. தில்லையாடி வருவாய் கிராமம் புல எண்.486/6ல் சங்கர் என்பவருக்கு நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

குறுக்கு விசாராணை :

எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் புல எண்.486/6ற்கான ஆவணங்களை

கொண்டு வரச்சொல்லி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.நான் ஆவணங்களை பார்க்காமல் புல எண்.486/6க்கான பட்டா சங்கர் பெயரில் உள்ளது என கூற இயலாது என்றால் சரியல்ல. நான் 15.03.2024ஆம் தேதி முதல் தரங்கம்பாடி வட்டாட்சியராக பணியாற்றி வருகிறேன். நான் வட்டாட்சியராக பணிபுரிவதற்கு முன்பு மேற்படி அலுவலகத்தில் பணிபுரிந்தேனா என்றால் துணை வட்டாட்சியர் நிலையில் வட்ட வழங்கல் அலுவலராக பணிபுரிந்துள்ளேன். நத்தம் நில வரி திட்டத்தின்படி பட்டா வழங்குவது தனி வட்டாட்சியர் நத்தம் நிலவரி திட்டம் அவர்களால் வழங்கப்படும் என்றால் சரிதான். அதனால் நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பட்டா குறித்து நத்தம் நிலவரி திட்ட தனி வட்டாட்சியர் அவர்களுக்குத்தான் தெரியும் என்றால் சரியல்ல. ஆவணங்களின் அடிப்படையில் என்னால் கூற இயலும். சர்வே எண்.486/7ல் பழைய சர்வே எண்.159/1பா–ஆகும். எனக்கு நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையை பெற்ற பிறகு நான் அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தை தெரிந்து ஸ்தல ஆய்வு செய்தேனா என்றால் செய்தேன். அந்த இடத்தில் செல்லம்மாள் என்பவர் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தின் பழைய புல எண்.159/1பா –விற்கான கிரயப்பத்திரம் செல்லம்மாளின் கணவர் பெயரில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கான கிரயப் பத்திரம் செல்லம்மாளின் கணவர் சண்முகம் என்பவரின் பெயரில் உள்ளதால் வாதி சரோஜா பெயருக்கு மேற்படி இடத்திற்கான பட்டா வழங்கியது தவறு என்றால் சரியல்ல. சண்முகம் என்பவர் தாவா சொத்திற்கான பட்டாவை வாதி சரோஜா பெயருக்கு வழங்கக்கோரி கடிதம் கொடுத்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.